




# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி: 27.10.2022

## தலைமைக்கழக அறிவிப்பு

**தேவர் திருமகனார்** குரு பூஜை விழா :
**வரும் அக்டோபர் 30ஆம் தேதி பசும்பொன்னில்**
**கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்கள்**
**மரியாதை செலுத்துகிறார்கள் !**

விடுதலைப் போராட்ட வீரரும், மக்களின் அன்பைப் பெற்று சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்தை அலங்கரித்தவரும், 'தென்னாட்டு போஸ்' என்று இந்திய அளவில் புகழ் பெற்றவரும், தேசியத்தையும், தெய்வீகத்தையும் இரண்டு கண்களாகப் போற்றிய மாபெரும் தலைவருமான **பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் ஜெயந்தி விழா மற்றும் குருபூஜை** வரும் **30.10.2022 ஞாயிற்றுக்கிழமை** அன்று நடைபெறவிருக்கிறது.

இதையொட்டி தெய்வீக திருமகனின் நினைவாலயம் அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்திற்குச் சென்று அன்றைய தினம் காலை 10 மணி அளவில் **கழகப் பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்கள்** மரியாதை செலுத்த உள்ளார்கள்.

இந்நிகழ்வில், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக செயலாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வட்ட/வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் என அனைவரும் திரளாக கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக்கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**